இணைப்பு 1.

[22-ம் பக்கத்தில் 203-ம் எண்ணுள்ள வினவிற்குரிய விடையைக் காண்க].

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளின் நியமனங்கள், சென்னை மாநகரில் மாநிலத் தலைமை மாஜிஸ்ட்ரேட் பரிவுரைகளின்பேரிலும் வெளியூரில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிவுரைகளின் பேரிலும் கருதிப் பார்த்து அரசாங்கத்தால் செய்யப்படுகின்றன. கௌரவ முதல் வகுப்பு சிறப்பு மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட வேண்டியவர் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், 65 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும். இந்தக் குறைந்த வயது வரம்பு வெளியூரிலுள்ள முதல் வகுப்புக் குற்ற விசாரணை நீதிமன்றக் குழுக்களுக்கும் (Bench Courts) பொருந்தும். இரண்டாம் வகுப்பு குற்ற விசாரணை நீதிமன்றக் குழுக்களில் அமருவதற்கென கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், இந்தக் குறைந்த வயது வரம்பு 40 வயதுக்குப்பதிலாக, 30 வயதாக இருக்க வேண்டும். சென்னை மாநகரில் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவிக்கான நியமனத்துக்கு குறைந்த வயது வரம்பு 35 ஆக இருக்கவேண்டும். கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்படுபவர் எவரும், சட்டங்களுக்குப் பொருள் காண்பதில் வல்லவராக இருக்கும் வகையில் ஆட்சி மொழியில் போதிய அறிவுடையவராக இருக்கவேண்டும். அவர் அரசாங்க சார்பற்றவராக இருப்பின், மக்களின் நம்பிக்கைக்குரியவராய் சிறந்த தகுதிபெற்றவராக இருக்க வேண்டும். அவர் ஓய்வு பெற்ற அரசாங்கப் பணியாளராயிருந்தால், இருதரப்பினரிடையே முடிவு எடுப்பதில் அனுபவமுடையவராகவும் இருக்க வேண்டும். மற்றும் அவர் காவல் துறையில் பணியாற்றியவராகவும் இருக்கக்கூடாது.

Appointments to the posts of Honorary Magistrates are made by the Government on consideration of the recommendations of the Chief Presidency Magistrate, Madras, in the City of Madras and the Collectors of the Districts concerned in the mufassal. Any person to be appointed as an Honorary Special First Class Magistrate shall be over 40 years of age but below 65 years of age. This minimum age-limit will also apply to the First Class Bench Courts in the mufassal. But the minimum age limit in respect of persons appointed as Honorary Magistrates to sit on Benches of the Second Class shall be 30 years instead of 40 years. For appointment to the posts of Honorary Magistrates in Madras City the minimum age-limit is 35 years. Any person to be appointed as an Honorary Magistrate should be sufficiently conversant with the official language to be able to interpret the statutes. If he is a non-official, he should be of outstanding merit commanding the confidence of the people and, if he is a retired Government servant, he should have experience in deciding between parties and he should not have served in the Police Department.